**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**
**CC.NO-165/2023**
**Dated :27.07.2026**
**Deposition of witness for : P.W.1**

**List of Witness LW2 Examined as PW1 (Victim)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாரியாயி | வயது | : | 80 |
| கணவர் பெயர் | : | ராமச்சந்திரன் | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | கந்தர்வக்கோட்டை | தொழில் | : | விவசாயம் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)

**முதல் விசாரணை**

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனக்கு தெரிந்தவர்கள் ஆவார்கள். கடந்த சுமார் ஒரு ஆண்டுக்கு முன்பு ஒரு நாள், மாலை 05.45 மணியளவில் நான் மருங்கூரணி ஐயப்பன் வீட்டின் அருகே மாடு மேய்த்து கொண்டிருந்தபோது, அங்கு வந்த அடையாளம் தெரியாத நபர்கள், என்னை அசிங்கமாக பேசி, தாக்கி விட்டு ஓடி விட்டார்கள். அவர்கள் யார் என்று என்னால் அடையாளம் காண இயலவில்லை. எதிரிகள் ஏற்கனவே பிரச்சினை செய்திருந்ததால், அவர்கள் தான் அவ்வாறு செய்திருப்பார்கள் என சந்தேகத்தின் அடிப்படையில் எதிரிகள் மீது எனது மகன் பழனிமுத்து **புகார் மனு** கொடுத்து விட்டார். அதன் பின்னர் தான் எதிரிகளுக்கும் வழக்கு சம்பவத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்று தெரிய வந்தது.

2. நாங்களும், எதிரிகளும் உறவினர்கள் என்பதால் ஊர் முக்கியஸ்தர்கள் மற்றும் குடும்ப பெரியவர்கள் முன்னிலையில் சமாதானம் பேசிவிட்டோம். இருவரும் கையெழுத்து செய்த சமாதான மனுவினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். எதிரிகள் மீது மேல்நடவடிக்கை தேவையில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியானவர் அரசு தரப்பு வழக்கை ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால், சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 Bharatiya sakshya Adhinayam'2023 சட்டத்தின் படி அரசு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார்.**

**<u>அதனால், நீதியின் பொருட்டு, சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது)</u>**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. போலிசார் விசாரணையில் கடந்த 30.07.2023 ஆம் தேதி 05.45 மணியளவில் நான் மருங்கூரணி ஐயப்பன் வீட்டின் அருகே மாடு மேய்த்து கொண்டிருந்தபோது, அங்கு வந்த எதிரிகள், என்னை அசிங்கமாக பேசி, கட்டையாலும், கையாலும் தாக்கி விட்டு ஓடி விட்டார்கள் என்றும் வழக்கு சம்பவத்தில் நான் பாதிக்கப்பட்டேன் என்றும், போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் சொன்னேனா என்றால் இல்லை.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஓம்.நா.சிவபழனி)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**